بِسْمِ اللَّهِ الرَّحْمَٰنِ الرَّحِيمِ

# jamaat ul sahih al islam – tamil nadu



ஜுமுஆ பேருரை

தலைப்பு :

## துஆக்கள் (பிரார்த்தனைகள்)

(பாகம் -3)

*ஹஸ்ரத் கலீஃபத்துல்லாஹ்*
*முனீர் அஹ்மது அஸீம் (அலை)*

*24 July 2020*
(**02 DHUL - HIJJAH 1441 AH**)

*வெளியீடு*

*அமீர்,*

*ஜமா அத் தமிழ்நாடு*

***Phone No:- 917502272774***

## DUAHS (INVOCATIONS) (PART - 3)

### துஆக்கள் (பிரார்தனைகள்) பாகம் - 3

உலகனைத்திலும் உள்ள தனது தோழர்களுக்கும் மற்றும் எல்லா முஸ்லீம்களுக்கும் ஸலாத்தினைத் தெரிவித்ததை தொடர்ந்து தஷஹ்ஹுத், தஅவ்வூது மற்றும் அல்.ஃபாத்திஹா ஓதியபிறகு **ஹஸ்ரத் கலீ.ஃபத்துல்லாஹ் முனீர் அஹ்மது அஸீம் (அலை)** அவர்கள் ஜும்மா பேருரையியை நிகழ்த்தினார்கள்.

**அல்ஹம்துலில்லாஹ் சும்ம அல்ஹம்துல்லாஹ்!** பிர்த்தனைகள் என்ற விஷயத்தில் எனது ஜுமுஆ பேருரையைத் தொடர்ந்து வழங்க அல்லாஹ் எனக்கு தவ்.ஃபீக் வழங்கியிருக்கின்றான்.

**அளவற்ற அருளாளானும் மேன்மேலும் கருணை காட்டுபவனுமாகிய அல்லாஹ்வின் பெயரால்.**

என் இறைவா! என் காயங்களுக்கு நிவாரணம் அளிப்பவனே, நோயுற்ற என் இதயத்திற்கு (குணமளித்து) உதவிபுரிவாயாக!

எனது இறவைா, நீ இன்றி என்வாழ்க்கை என்பது எதுவும் இல்லாத ஒன்றாகும் நீயின்றி இவ்வுலகில் வாழ்வதைவிட, இறப்பதே மிக மேலானது.

எனது இறைவா, என் தோள்களில் நீ வைத்திருக்கும் மாபெரும் பணி மற்றும் பொறுப்புக்களில், நீ என்னைப்பற்றி திருப்தி அடைவதற்கு போதுமான மன விருப்பத்தையும் தைரியத்தையும் எனக்கு வழங்குவாயாக! நீ என்னிடமும், நான் செய்து வரும் பணியிலும் திருப்தியாக இருந்தால், மக்கள் என்னை ஒரு பைத்தியக்காரன் மற்றும் வஞ்சகன் என்று கேலிசெய்தாலும், என்னைக் குறை கூறினாலும், என் மரியாதை மற்றும் கௌரவத்தை அவர்கள் இழிவுபடுத்தினாலும் இவை ஒன்றும் என்னை ஒருபோதும் பாதிக்காது, ஏனெனில் நீ மட்டுமே மரியாதை மற்றும் கண்ணியத்தை நீ விரும்புவோருக்கு வழங்குபவன். எனக்கு கிடைக்கும் மரியாதையும், நான் உண்ணும் உணவு வகைகளும் உன்னிடமிருந்து மட்டுமே வருகிறது, இந்த முட்டாள்களிடமிருந்து அல்ல.

என் இறைவா, வானத்திலிருந்து வரும் சுடரை என் இதயத்தில் வைத்து, அவற்றை மேன்மேலும் எரியவைத்து, ஆயிரக்கணக்கான இழந்த ஆன்மாக்களை சஹீஹில் இஸ்லாமில் திரும்பக் கொண்டு வர நீ அனுமதிப்பாயாக!

எனது இறைவா! என்னிடமுள்ள அனைத்தையும் நான் உனக்காக தியாகம் செய்திருக்கின்றேன். உனது மார்க்கத்தைப்பற்றி எதுவும் தெரியாத நான் வெறும் ஒரு படிப்பறிவற்றவன், நான் என் அறியாமையில் ஒரு பூஜ்ஜியமாக இருக்கிறேன். எனக்கு ஞானத்தை கொடுப்பாயாக! அந்த ஞானத்தின் ஒளியை என் மனதிலும் என் இதயத்திலும் புகுத்தி, இந்த ஞானத்தை பொதுவாக மனிதகுலத்திற்கு குறிப்பாக இஸ்லாமிய நம்பிக்கையை பின்பற்றும் சகோதர சகோதரிகளுக்கு வினியோகிக்க எனக்கு வலிமை, தைரியம் மற்றும் ஆற்றலை வழங்குவாயாக!

என் இறைவா! ஒரு அற்புதத்தை வெளிப்படுத்தி காட்டி மக்களை திருக்குர் ஆனின்பால் ஈர்த்துக் கொள்வாயாக! சரியான பாதையில் பயணம் மேற்கொள்ள விரும்புவோருக்கு உன்னுடைய நூல் ஒரு வழிகாட்டியாக திகழ்கிறது என்பதில் சந்தேகமில்லை. அவர்களின் கண்களிலிருந்து சந்தேகத்தின் திரையை அகற்றி, உனது பாசத்திற்குரிய தூதர் (ஸல்) அவர்களுக்கு நீ இறக்கி அருளிய உனது புனித புத்தகத்தை அவர்களுக்கு புரியவைப்பாயாக.

என் இறைவா! இஸ்லாமிய தோட்டம் காய்ந்துவிட்டது, கடந்த நூற்றாண்டில் நீ அனுப்பிய வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களால் அறுவடை செய்யப்பட்ட அனைத்து பழங்களும் இந்த நூற்றாண்டில் வீழ்ந்து விட்டன. இந்த தோட்டத்தை சுத்தம் செய்வதற்கும் மீண்டும் புத்துயிரைக் கொடுப்பதற்கும் அல்லவா நீ என்னை எழுப்பி இருக்கிறாய்! இதனால் இப்போது இத்தோட்டத்திலிருந்து புதிய பழங்கள் அறுவடை செய்யப்படுகின்றன. மேலும் இத்தோட்டத்தில் எல்லாமே மீண்டும் பச்சை நிறமாகவும், வறண்டு போகாமலும் இருக்கும். மட்டுமல்ல ஒவ்வொரு கண்களும் அதில் தென்படும் அழகினை ஈர்த்தவாறு இருக்கும்.

என் இறைவா! அவர்களை தீமையிலிருந்து விடுவிக்க போதுமான மற்றும் எல்லா நாடுகளிலும் விநியோகிக்க தகுந்த ஒரு மருந்தினை நீ எனக்கு வழங்குவாயாக! என் இறைவா! இப்போதெல்லாம் மக்களின் கையால் மார்க்கம் பாதிக்கப்படுகிறது. இஸ்லாம் ஒரு இழிவான நிலையை அடைந்துள்ளது. இறைவா, இந்த பிரச்சினை இன்னும் உனது சிம்மாசனத்திற்கு முன் வரவில்லையா?

என் இறைவா! உனது மார்க்கத்தின் அழகான முகம், நீ பூரணப்படுத்தி வழங்கிள உனது மார்க்கம் மறைக்கப்படுமா? எனது அல்லாஹ்வே! இந்த நூற்றாண்டில் தோன்றிய உனது இந்த பணிவான ஊழியருக்கும் சாத்தானுக்கும் இடையே ஒரு பெரிய ஆன்மீக போர் நடைபெறுகிறது. என் இறவைா! இந்த போர்களத்தை எண்ணி என் இதயம் ஓடுகிறது, கடந்த கால நபிமார்கள் அனைவரும் இந்த யுத்ததத்தின் செய்தியை உனக்கு கொடுத்திருந்தனர் மேலும் அவர்கள் இந்த விஷயத்தைப் பற்றி தொடர்ந்து பிரார்த்தனைச் செய்து வந்தனர். உனது கருணையால் சாத்தானுக்கு எதிரான வெற்றியை எனக்குக் வழங்குவாயாக! ஏனெனில் சாத்தான் தன் படைகளையெல்லாம் சேகரித்து வருகிறான்.

அல்லாஹ்வே! உனது கலி∴பத்துல்லாஹ்வை ஏற்றுக் கொண்டு சஹீஹில் இஸ்லாத்தின் படகில் இருப்பவர்கள், உன் மீது முழுமையா நம்பிக்கை வைத்து உன் முன் வந்துள்ளனா். இவ்வுலகத்தின் கஷ்டங்களிலிருந்தும், மறுவுலகில் நிகழப்போவதிலிருந்தும் எங்கள் அனைவரையும் காப்பாற்றுவாயாக! மறுமையின் ஆபத்துக்கலிருந்து எங்களைக் காப்பாற்றி, நித்திய அமைதியையும் உனது எல்லையற்ற கருணையையும் எங்கள் மீது நீ பொழிவாயாக!

நாங்கள் உன்னை அடையாளம் கண்டுகொண்டதிலிருந்து எங்கள் இதயங்கள் மிகுந்த மகிழ்சியை பெற்றிருக்கின்றது. உனது கிருபையால் நாங்கள் இப்போது அந்நியார்களல்ல. சஹீஹில் இஸ்லாமை எங்களுக்கு ஒரு அருட்கொடையாக மாற்றுவாயாக! எங்களுக்காக காத்திருக்கும் எல்லாவிதமான தீய காரியங்கள் மற்றும் தவறான தூண்டுதல்களிலிருந்தும் அது விடுபட்ட ஒன்றாக உள்ளது. எல்லா கண்களும் எங்கள் மீது தான் உள்ளன இறைவா!

என் இறைவா! மறுவுலக வாழ்கையிலிருந்து நீ எங்களை அகற்றிவிடாதே, மறுமையில் ஒரு நல்ல வெகுமதியைப் பெறுவதற்காக இந்த உலகில் எங்களுக்கு நிறைய தியாகங்களை செய்வதற்கான வாய்பபை அளிப்பாயாக! உனக்காக துக்கங்களைத் தாங்குவது எல்லா விதமான சந்தோஷங்களையும் விட மிக சிறந்தது. ஜமா அத்துச் சஹீஹில் இஸ்லாமை அமைதி மற்றும் சாந்தியினை தரும் ஆசீர்வாதத்தின் ஊற்றாக ஆக்குவாயாக! மற்றவர்களையும் இந்த பாடகுக்கு அழைத்து செல்வதற்காக, எனது இறைவா, அவர்களை உன்னிடம் கொண்டுவருவதற்காக எங்களை தாயி-லில்லாக்களாக (Dai-Illallah) மாற்றுவாயாக!

என் இறைவா! ஜமா அத்துச் சஹீஹில் இஸ்லாம் என்னும் இந்த படகில் நுழைவோர் அனைவரும் என் ஆன்மீக குழந்தைகள் ஆவார்கள் அவர்களை நீ பாதுகாப்பதோடு மார்க்கம் மற்றும் அவர்களின் செல்வங்களைக் குறித்து அவர்களின் அறிவை அதிகரிக்கவும் செய்வாயாக! இதனால் அவர்களுக்கு தங்கள் செல்வங்களை உனது பாதையில் செலவிடமுடியும். உனது கிருபை மற்றும் அருளினை அவர்களின் முயற்சிகளிலும், வார்த்தைகளிலும், தொழில்களிலும் பொழிவாயாக! தங்கள் வேலையில் அவர்களை நேர்மையுள்ளவர்களாக ஆக்குவாயாக! தங்களின் சொந்த எதிரிகளாக இருந்தால் கூட மற்றவர்களிடம் பொறாமை அல்லது வெறுப்பு இல்லாதவர்களாக அவர்களை மாற்றுவாயாக! எனது இறைவா, அவர்களை எப்போதும் நிம்மதியுடனும் ஒற்றுமையுடனும் வாழ வைப்பாயாக!

அல்லாஹ்வே! இது என்னை எவ்வாறு பாதிக்கும் என்பதை நீங்கள் நன்கு அறிகின்றாய். அது எனக்கு வேதனையை விளைவிக்கும்போது, அந்த நேரத்தில் நீ தேர்ந்தெடுத்த ஊழியன் இவ்வாறு பாதிக்கப்படுவதை உன்னால் பார்க்க முடியாது. அந்நிலையில் உன் கோபம் அவர்கள் மீது விரைவாக இறங்கிவிடும்.

அல்லாஹ்வே! அவர்கள் என் ஆன்மீக குழந்தைகள். அவர்களை எண்ணி நான் எவ்வளவு கவலைப்படுகிறேன் என்பது உனக்கு நன்றாகத் தெரியும். அவர்களுக்குள் வேதனையில் இருப்பவர்கள், நோய்வாய்ப்பட்டவர்கள், தங்கள் வீட்டில் அமைதி மற்றும் நிம்மதியில்லாதவர்கள், விவாதங்களை நடத்த விரும்புவோர், பயனற்ற வாதங்களில் ஏற்படுவோர்கள், தங்கள் தொழுகைகள் தியானம் மற்றும் திருக் குர்-ஆனைப் படித்தல் போன்றவற்றில் ஏற்படாதவர்கள், உனது வழியில் நிதி தியாகங்களைச் செய்யாதவர்கள், நோன்பைக் கடைப்பிடிக்காதவர்கள், பர்தாவைக் கடைப்பிடிக்காத பெண்கள், மேலும் எந்தவித மரியாதையும் இல்லாமல் ஆண்களை தங்கள் தோழர்களாக எண்ணி அவர்களுடன் அரட்டை அடிப்பவர்கள் போன்றவர்களும் அவர்களிடையில் உள்ளனர்.

அல்லாஹ்வே! நீ என் சாட்சியாக இருக்கின்றாய், நான் உன்னை என் சாட்சியாக எடுத்துக்கொள்கிறேன். நீ எத்தனை முறை தரிசனங்கள், கனவுகள் மற்றம் வெளிப்பாடுகளின் மூலம் அவர்களின் மிக மேசமான நடத்தைக் குறித்து என்னைக் காட்டியிருந்தாய், அப்போதெல்லாம் யாருக்கும் எதுவும் தெரியாமல்

அவர்களுக்கு அதரவாக நான் உன்னிடம் திரும்பி அவர்களுக்காக மன்னிப்பு கேட்டேன்.

நீ என்னைக் காண்பிக்கும் விஷயங்கள் எவ்வளவு அசிங்கமானவை மொபையில் போண், வாட்ஸ்அப் போன்ற ஊடகங்கள் மூலம் அநாகரிகமான செய்திகளை பகிர்ந்துக் கொள்ளும் சிறுவர்கள் மற்றும் சிறுமிகளின் நடத்தை எந்த அளவு தீயவையாகும். இச்செய்தி என் உடல் நிலையை மிகவும் அதிகமாக பாதிக்கின்றது என்பது உனக்கு நன்றாக தெரியும். அவர்களின் எதிர்கால விளைவுகளைக் குறித்து எண்ணும் போது, அது எனக்கு மிகுந்த பயத்தைத் தருகிறது. மொபைல்கள் மற்றும் வாட்ஸ் அப் மூலம் நடக்கும் இவற்றை நீ எனக்கு காண்பிப்பதை விட, பகல் மற்றும் இரவில் என் எதிராளிகள் என் மீது கொட்டும் தவறான வார்த்தைகளுக்கும் குற்றசாட்டுகளுக்கும் ஆளாகி விடுவதே மிக நல்லது இறைவா!

எனது இறைவா! ஒவ்வொரு நாளும் எத்தனை முறை நான் அவர்களுக்காக உன்னிடம் மன்னிப்பு கோரி மன்றாடுகிறேன் என்பதற்கு நீ சாட்சியாக இருக்கிறாய்.

என் இறைவா! இந்த படகில் நுழைந்த அனைவருமே ஆகாயத்திலிருந்து வரும் வாசனையை உள்ளிழுக்கிறார்கள், இது போன்ற ஒரு சொர்க்கீய வாசனை நம்மிடையே இதுவரை யாரும் அனுபவிக்கவில்லை. ஆனால் இப்போது கெட்ட எண்ணம் உள்ளவர்கள் இந்த படகில் நுழைவதை நாங்கள் விரும்பவில்லை. அல்லாஹ்வே இந்த படகில் இவ்வகையான நபர்கள் இருந்தால், அவர்களை நம்மிடமிருந்து அகற்றி விடுமாறு மிக பணிவுடன் நான் கேட்டுக்கொள்கிறேன்.

எனது இறைவா! எங்களுக்கு அதிக எண்ணிக்கை தேவையில்லை, ஆனால் பக்கியுள்ளவர்கள், தக்வா கொண்டவர்கள், ஒருவருக்கொருவர் மதிப்புடன் நடந்து கொள்பவர்கள், நீ தேர்ந்தெடுத்த இந்த ஊழியருக்கு முழுமையாக கீழ்ப்படிதலைக் காட்டுபவர்கள் போன்ற நல்லியல்புக்கொண்ட மக்கள் மட்டுமே தேவையாகும்.

எனது இறைவா! அவர்களின் இதயத்தையும் அவர்களின் நோக்கங்களையும் அறிந்தவன் நீ மட்டுமே, அவர்களுடைய செல்வம் அல்லது கல்வி, அல்லது அழகு அல்லது குடும்ப அந்தஸ்து காரணமாக ஆணவம் கொள்பவர்களாக அவர்களை மாற்றிவிடாதே!

அல்லாஹ்வே, அவர்கள் அனைவரையும் மிகுந்த மனத்தாழ்மையுடன் நடந்துக் கொள்பவர்களாக ஆக்குவாயாக! கீழே குனிந்து பூமியை முழுவதுமாகத் தொடும் அளவு பணிவை அவர்களுக்கு வழங்குவாயாக! ஒரு மரத்தின்

உதாரணத்தை நீ எங்களுக்கு வழங்கியிருக்கிறாய், ஒரு மரம் அது எவ்வளவு பழங்களைத் தாங்குகிறதோ, அவ்வளவு அது கட்டுப்படுகிறது. ஆனால் பழங்கள் இல்லாத ஒரு மரம், அது நிறைய சத்தம் போட்டு, மிக சிரமங்களுடன் இருக்கிறது.

அல்லாஹ்வே, நீ படைத்த எல்லாவற்றிலும் ஒரு முன் மாதிரி வைத்துள்ளாய்

எனது இறைவா! எனக்கு உதவி புரிபவனே, எல்லாவற்றையும் எனக்குக் காண்பிப்பவனே, நான் என் ஆன்மீக பிள்ளைகளுக்காக உன்னிடம் மன்றாடுகிறேன்.

அவர்களுக்கு நல்ல பழக்கவழக்கங்கள் மற்றும் தூய்மையான பேச்சுகளை வழங்குவாயாக! பெண்கள் மற்றும் சிறுமிகள் தங்களை ஒழுங்குபடுத்தி நடந்து கொள்ளவும், சத்தமாக பேசாமலும், சிரிக்காமலும் இருப்பதற்கு வழிவகுப்பாயாக! திருக்குர்- ஆனிலிருந்தும், நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் போதனைகளிலிருந்தும் நீ எங்களை புரிந்து கொண்டதை நாங்கள் நன்கு அறிவோம். மனைவி தங்கள் கணவனிடமும், கணவன் தங்கள் மனைவியிடமும் இணைக்கமாக வாழவைப்பாயாக! வீட்டில் சிறிய பிரச்சினைகள் அல்லது தீவிரமான பிரச்சினைகள் இருந்தாலும் எந்தவொரு வீணான வாதங்களும் வீட்டில் இல்லாமல், கணவன் மனைவி ஒருவொருக்கொருவர் மன்னிப்பவர்களாக மாற்றுவாயாக! வீட்டில் சில பிரச்சினைகள் இருந்தால் கூட, அதன்பெயரில் விவாகரத்து பெறுவதிலிருந்தும், கணவர் தவறு செய்திருந்தால் கூட தங்கள் கணவருக்கு எதிராக அனைவரும் அறியும் விதம் சத்தம் போட்டு, தங்கள் வேதனை மற்றும் கஷ்டங்களை கூறி நடப்பதிலிருந்தும் அவர்களை தடுத்துக் கொள்வாயாக!

எனது இறைவா! எனது அன்பாளனே! இந்த படகில் நுழைந்த நேர்மையான அனைவரையும் நல்ல ஆன்மீக குழந்தைகளாக ஆக்குவாயாக!

என் இறைவா! நான் அவர்களுடன் மகிழ்ச்சியாக இருந்தால், நீயும் அவர்களுடன் மகிழ்ச்சியாக இருப்பாய் என்றும் பக்தியுள்ள அவர்களை நேசிக்குமாறு நீ மலக்குகளுக்கு கட்டளை விடுப்பாய் என்றும் இதன் விளைவாக, அவர்கள் கடந்த காலத்தில் பார்த்திராத அல்லது சாட்சியாக இல்லாத அசாதாரணமான இறை அடையாளங்களுக்கு அவர்கள் சாட்சியாக இருப்பார்கள் என்றும் பலமுறை நீ எனக்கு வெளிப்பாடுகள் மூலம் தெரிவித்திருந்தாய்

எனது இறைவா! நான் உன் முன் சமர்பித்த துவாக்களை நீ ஏற்றுக்கொள்வாயாக! அவர்கள் ஒவ்வொருவருக்கும் நல்ல ஆரோக்கியத்தையும் நீண்ட ஆயுளையும் வழங்குவாயாக! மேலும் உன் தீனுக்கு சேவை புரிவதற்கும் உண்மையைத்தேடும் பலமக்களை இந்த படகில் நுழைவைப்பதற்கும் அவர்களுக்கு ஆற்றல் அளிப்பாயாக!

அல்லாஹ்வே! நீ அவர்களை நல்லவர்களாக ஆக்குவாயாக! அல்லாஹ்வே, அவர்களை மற்றவர்களுக்கு உதவும்படி அவர்களை நல்லியல்பு கொண்டவர்களாக மாற்றுவாயாக! நீ எங்கள் எஜமானன், உன்னைத் தவிர வழிப்பாடுக்குரியவன் வேறு எவருமில்லை. அல்லஹ்வே, அவர்களை சாத்தானிடமிருந்து அகற்றி, உன் அடைக்கலத்தில் வைத்து அவர்களைக் பாதுகாப்பாயாக!

எனது எஜமானனே, என் துவாக்கள் அனைத்தையும் ஏற்றுக் கொள்வாயாக! உன் வழியில் என் உயிரைக் கூட தியாகம் செய்ய நான் தயாராக இருக்கிறேன். மிகுந்த நம்பிககையுடன் உன் முன் அடைக்கலம் தேடிவந்திருக்கும் எனக்கும் என் ஆன்மீக குழந்தைகளுக்கும் நீ உதவிபுரிவாயாக! சஹீஹில் இஸ்லாத்தை எங்கள் அனைவருக்கும் ஒரு அருள் கொடையாக மாற்றுவாயாக! எங்களுக்காக காத்திருக்கும் எல்லா துரதிர்ஷ்டங்களிலிருந்தும் எங்களை காப்பாற்றுவாயாக! என் இறைவா, இந்த ஜமா அத்தானது ஒரு தூய்மையான அமைப்பாகிறது. எனவே சாத்தான் எங்களை அணுகாமல் தடுத்துக் கொள்வாயாக!

எனது இறைவா! இந்த படகில் பிறந்த எங்கள் குழந்தைகள் அனைவருக்கும் நல்ல ஆரோக்கியத்தையும் நீண்ட ஆயுளையும் வழங்குவாயாக! எல்லா வகையான இருளிலிருந்தும் அவர்களை விலக்கி, உனது ஒளியால் அவர்களை அறிவூட்டுவாயாக! எல்லா வகையாகயான நோய்களிலிருந்தும், தொல்லைகளிலிருந்தும் அவர்களைக் காப்பாற்றுவாயாக! அவர்கள் மீது உன் கருணையை பொழிவாயாக! அவர்களை மார்க்கத்திற்கு சேவை புரியும் நல்ல குழந்தைகளாக மாற்றி, தூயத்தன்மைக் கொண்ட குழந்தைகளைப் போல் வளரச் செய்வாயாக! சாத்தானிய தூண்டுதல்களிலிருந்து அவர்களை விலக்கி வைத்துக் கொள்வாயாக! டிவி, வாட்ஸ் அப், யூத்டுப், போன்ற சமூக வலைத்தளங்கள் மற்றும் சூதாட்டங்களுக்கு அடிமைகளாகாமல் அவர்களை பாதுகாப்பாயாக! தங்கள் ஏழுவயதிலிருந்தே அவர்கள் பிரார்த்தனைகளுடன் பற்றுக் கொண்டவர்களாகவும், திருக்குர்-ஆன் பாராயணம் செய்பவர்களாகவும், திக்ரில்

ஏற்படுபவர்களாகவும் அல்லாஹ்வின் பண்புகளைப் பற்றி நினைவு கோருபவர்களாகவும், பெற்றோருக்கு மிகுந்த மரியாதை காட்டுபவர்களாகவும் அவர்களை மாற்றுவாயாக! மேலும் புகைபிடிப்பதன் தீய சுழற்சியிலிருந்து அவர்களை தடுக்கவும் விலக்கவும் செய்வாயாக!

பிரபஞ்சத்தின் எஜமானனே, என் பிரர்த்தனைகளையும் வேண்டுதல்களையும் கேட்பாயாக! ஆமீன் சும்ம ஆமீன்.

அடுத்தவாரம் இதே விஷயத்தில் எனது பேருரையைத் தொடர அல்லாஹ் எனக்கு தவ்.ஃ.பீக் வழங்கி, அருள் புரிவானாக! இன்ஷா அல்லாஹ், ஆமீன்.

**TRANSLATED BY:**

**AZIM AHMAD**

**EDITING & PUBLISHING ARE DONE BY**

***AMIR***

***JAMAAT - UL-SAHIH-AL-ISLAM***

**TAMIL NADU**

**Ph No: 917502272774**